செய்தி இதழாகப் பதிவு பெற்றது


# தந்தி

இல: 1118 | 197[illegible] ஆகஸ்ட் 26 புதன்கிழமை | விலை சதம் 5


University of Jaffna, Sri Lanka RECEIVED 91-7-8 Periodicals Division Library

### களை கொல்லி, கிருமிநாசினி ஆகியவற்றால்

# மனித வர்க்கத்திற்கு பெருமளவில் ஆபத்து!

**விவசாயிகள் பெருமளவில் உபயோகிக்கும் களை கொல்லி, கிருமி நாசினி, ஆகியன மனித, வர்க்கத்திற்கு பெரும் ஆபத்து விளைவிப்பனவாக இருக்கின்றன என்று அரசாங்க இரசாயன பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இவற்றை அருந்தி தற்கொலை புரிபவர்கள் ஒரு பக்கம், விவசாயிகள் இவற்றை சரியான முறையில் உபயோகிக்காதபடியால் பாதிக்குப்படுபவர்கள் மறு பக்கம். மொத்தத்தில் நாட்டின் சுகாதாரத்துக்கு இவை பெரிதும் தீங்கு விளைவிக்கின்றன என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

உணவு உற்பத்திக்கும் இந்தக் களை கொல்லி, கிருமி நாசினி ஆகியன தடையாக உள்ளன எனக் கூறப்படுகிறது.

கடந்த 1968 — 69-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் அரசாங்க இரசாயன பரிசோதகர் திரு. என். ஜயதுங்க மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

கிருமி நாசினி, களை கொல்லி போன்றவற்றை உபயோகித்து உற்பத்தி செய்யப்பட்ட உணவு வகைகளைப் பரிசோதித்துப் பார்த்த போது அவற்றில் சத்துக் குறைவு காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## ரயில் மோதி டிராக்டர் நொறுங்கியது

புத்தளம், ஆக. 25

புத்தளம் மதுரங்குளி ரயில் கடவையில் நேற்றுப் பகல் புத்தளத்தில் இருந்து வந்த ரயிலும் ஒரு டிராக்டரும் மோதிக் கொண்டதில் டிராக்டர் சாரதி படுகாயம் அடைந்தார். டிராக்டர் சுக்கு நூறுகியது. (ஐ)

## பொலீஸாரும் ஹிப்பிகளும் பயங்கர மோதல்

ஆம்ஸ்டர்டம், ஆக. 25

ஆம்ஸ்டர்டம் நகரில் டாம் சதுக்கத்தில் பொலீஸாருக்கும் ஹிப்பிகளுக்கும் இடையில் நேற்றிரவு ஏழு மணி நேரமாக நடைபெற்ற மோதலில் 30 பேர் காயமடைந்தனர்.

குழப்பத்தின்போது பொலீஸ் சுட்டதில் மூவர் காயமடைந்தனர். அடுத்தடுத்து தண்ணீர் பாய்ச்சியும் குண்டாந்தடிப் பிர


(4-ம் பக்கம் பார்க்க)

## மீனாட்சி



என்னுங்க, பால் சபையில் விசாரணை நடக்குமாமே!

ஆமாங்க, விசாரணையில் காலதாமதம் இருக்கக்கூடாது, ஏனென்றால் பால் புளித்துப்போகும்!



பாகிஸ்தானிலுள்ள இலங்கைத் தூதுவர் சேர் ராஸிக் பரீத் பதவிக் காலம் முடிந்து நாடு திரும்புகிறார். இஸ்லாமாபாத்தில் ஜனாதிபதி யஹ்யாகானிடம் அவர் பிரியாவிடை பெற்றபோது பிடிக்குப்பட்ட படம். (ம)

## டாக்டர் பட்டத்தை ஏற்க பிரதமர் ஸ்ரீமா மறுப்பு

கொழும்பு பல்கலைக் கழகம் இன்று நவ அரங்க சாலையில் நடத்தும் பட்டமளிப்பு வைபவத்தில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்க இருந்த டாக்டர் பட்டத்தை ஏற்பதற்கு அவர் மறுத்துள்ளார்.

இதுபற்றி பிரதமர் பல்கலைக் கழக உப வேந்தருக்கு அறிவித்து உள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இன்று நடைபெறும் இந்த பட்டமளிப்பு வைபவத்தில் மகா தேசாதிபதி திரு. வில்லியம் கொபல்லாவ. கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஆகியோருக்கு டாக்டர் பட்டங்கள் வழங்கப்படும். (ஐ)

## சிங்கைப் பிரதமர் இன்று வருகிறார்



சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு. லீ குவான் யூ இன்று பிற்பகல் 6-35 மணிக்கு இலங்கை வருகிறார்.

உதியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இங்கு வரும் திரு. லீ- குவான் யூ நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

இன்று கட்டுநாயக்கா மூலம் இலங்கை வரும் சிங்கப்பூர் பிரதமர் பெந்தோட்டைக்கும் விஜயம் செய்வார். அத்துடன் பிரதமரின் வாசஸ்தலமான ஹொரகொல்லைக்கும் மற்றும் கண்டி, அநுராதபுரம், சிகிரியா பகுதிகளுக்கும் விஜயம் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையில் இருந்து திரும்பிய சமயம்

# ஐந்து வயது சிறுமி மீது குற்றம் புரிந்தாராம்

## தாயும் மகளும் சாட்சியம் கூறினர்

அனுராதபுரம், ஆக. 25

ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தியைக் கற்பழித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு அனுராதபுரம் மேலதிக நீதிபதி திரு. மேர்வின் விஜேசிங்கா முன் விசாரிக்கப்பட்டது.

இவ் வழக்கில், பொத்தேகமை கனிஷ்ட பாடசாலையைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமி ஒருத்தியைக் கற்பழித்ததாக பி. ஆர். டிங்கிரி பண்டா என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

டாக்டர் பி. வி. டி. சப்பரமாது சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"கடந்த மாதம் 23-ம் திகதி மாலை 4-25க்கு குறிப்பிட்ட சிறுமியை நான் பரிசோதித்தேன். சிறுமியால் எதையும் கூற முடியாமல் இருந்தது. ஆனால், தாயார் சம்பவத்தைக் கூறினார்.

தனது மகள் இரத்தம் பீறிட ஓடிவந்தாள் என்றும் அவள் அணிந்திருந்த உள் கால்சட்டை கிழிந்திருந்ததாகவும் தாயார் கூறினார். சந்தேக நபர் சிறுமியைப் பலாத்காரமாகத் தூக்கிச் சென்றதாக சுமணாவதி என்ற இன்னொரு சிறுமியும் தாயிடம் கூறியிருந்தாள்.

சிறுமியை நான் பரிசோதித்துப் பார்த்தபோது தொடையின் மேல் பகுதியில் இரத்தம் இருந்தது. இந்த இரத்தத்தின் ஒரு பகுதியை இரசாயனப் பரிசோதகருக்கு அனுப்பிவைத்தேன். இரத்தத்தில் ஆண் தாது இருக்கவில்லை என இரசாயனப் பரிசோதகர் அறிக்கை சமர்ப்பித்திருந்தார்."

சம்பவத்துக்கு ஆளாகியதாக கூறப்படும் 5 வயதுச் சிறுமி தன் சாட்சியத்தில் கூறியதாவது:

"நான் எனது தாயாருடன் வசிக்கிறேன். முதலாம் வகுப்பில் படிக்கிறேன். நான் மற்றைய பிள்ளைகளுடன் நடந்தே பாடசாலைக்குச் செல்வது வழமை. பாடசாலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது குளக்கட்டு மீது உள்ள ஒற்றையடிப் பாதை வழியாக வருவது வழமை.

எதிரியை எனக்குத் தெரியும். அவர் பாடசாலைக்கு முன் வசிக்கிறார். சம்பவம் நடைபெற்ற தினம் எனக்கு ஞாபகம் இருக்கிறது."

இக் கட்டத்தில் சிறுமி மௌனமாக இருந்தார்.

நீதிபதி: "உம்மால் சாட்சியமளிக்க முடியுமா?"

சாட்சி: "ஆம்."

நீதிபதி: "சாட்சியமளிக்கப் பயப்பட வேண்டாம். யாராவது உமக்குப் பிழை செய்திருந்தால் அவர் தண்டிக்கப்படுவார்."

சிறுமி மேலும் கூறியதாவது:—

"நான் வீட்டுக்குத் திரும்பிய சமயம் என் மீது இரத்தம் இருந்தது. இந்த எதிரிதான் என்னுடன் துர்நடத்தையில் ஈடுபட்டார். நான் பாடசாலையில் இருந்து வீட்டுக்குத் திரும்பியபோது எதிரி என்னைப் பிடித்துக் கொண்டார். மற்றப் பிள்ளைகள் சத்தம் போட்டனர்."

இக் கட்டத்தில், சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட முடியாதவர் என எதிரியின் வழக்கறிஞர் நீதிபதியிடம் கூறினார்.

மேல் விசாரணை செப்டெம்பர் மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கறிஞர் திரு. டபிள்யூ. பி. சிற்றம்பலம் எதிரி தரப்பில் ஆஜரானார். (ல)

## குழந்தைக்குத் தந்தை தான் அல்ல என மறுப்பு

"முறைப்பாட்டுக்காரர் நான் சட்டப்படி திருமண செய்த பெண் தான். ஆனால் அவரது குழந்தைக்கு நான் தந்தையல்ல. எமது திருமணம் நடைபெற்ற ஒரு சில நாட்களுக்குள்ளேயே அவள் என்னைக் கைவிட்டுவிட்டாள்."

கம்பஹா நீதிபதி திரு. டபிள்யூ. பி. என். டி. சில்வா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்ட ஜீவனாம்ச வழக்கின்போது எதிர்மனுதார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கம்பஹா, அஸ்கிரிய என்ற இடத்தைச் சேர்ந்த ஜி. ஸ்ரீமதி சந்திரிகா என்ற பெண் தனக்கும் தனது குழந்தைக்கும் தனது கணவரான பனகொடை இராணுவ முகாமைச் சேர்ந்த ரஞ்சித் குணவர்த்தனவிடமிருந்து சீவனாம்சப் பணம் பெற்றுத் தரும்படி இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாருக்காக ஆஜரான வழக்கறிஞர்:— "எதிர் மனுதார், மனுதாரருக்குத் தெரியாமல் விவாகரத்து பெற்றுள்ளதாக இன்று எமக்கு ஓர் அநாமதேயக் கடிதம் கிடைத்துள்ளது.

எதிர்மனுதாரின் வழக்கறிஞர்:— அப்படி எதுவும் நடக்கவில்லை. "எதிர் மனுதார் விவாகரத்து விஷயம்பற்றி மனுதாரின் தாயாருக்கும் கூறியுள்ளார். இன்னும் இரு மாதங்கள் கழித்தே விவாகரத்துச் செல்லுபடியாகும் என்பதாலேயே விஷயம் இப்போது மறைக்கப்படுகிறது.

எதிர்மனுதார் வழக்கறிஞர்:— முற்றிலும் பொய். எனது கட்சிக்காரரை அவரது மனைவியான மனுதார் திருமணத்திற்கு அடுத்த கணமே கைவிட்டு விட்டார்.

இக் கட்டத்தில் மேல் விசாரணை செப்டெம்பர் மாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல-7)

## பீட்டர் செல்லர்ஸின் மூன்றுவது திருமணம்

லண்டன், ஆக. 25

ஏற்கனவே இரண்டு முறை திருமணம் செய்த நடிகர் பீட்டர் செல்லர்ஸ் மூன்றுவது முறையாக 23 வயதான அழகி மிராண்டா குவாரியை நேற்று திருமணம் செய்தார்.



பீட்டர் செல்லர்ஸ்

மான்குரோவ்ட் பிரபுவின் பெரு மகளான செல்வி குவாரி நேற்று நடைபெற்ற திருமண வைபவத்துக்கு நவீன பாணி ஆடை அலங்காரத்துடன் வந்திருந்தார்.

புன்சிரிப்புடன் காணப்பட்ட செல்வி குவாரி சிறிது பதட்டமடைந்தவள்போல் காணப்பட்டாள்.

44 வயதான பீட்டர்ஸ் 10 நிமிட நேரமாக நடந்த திருமணச் சடங்கின் பின் தனது புது மனைவியை கட்டியணைத்து "இதுதான் அது" என்று மனைவியை அறிமுகப்படுத்தினார்.

பிரபல ஹாலிவுட் நடிகரான பீட்டர் செல்லர்ஸ் தனது முதல் மனைவியை 1964-ம் ஆண்டிலும் இரண்டாவது மனைவியை 1968-ம் ஆண்டிலும் விட்டுப் பிரிந்தார்.

"எனது மனைவி மிகவும் அழகானவள்" என புது மனைவியைப் பற்றி பீட்டர் கூறினார்.

இத் திருமணத்தின் போது, தான் செல்லமாக வளர்க்கும் நாய்களையும் செல்வி குவாரி தன்னுடன் அழைத்து வந்தது சகலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. (ல)

## வலையாக சிக்கினான் திருடன்

நாவலப்பிட்டி, ஆக. 25

ஜன்னலை உடைத்து திருடப் புகுந்தவர் வலையாக மாட்டிக் கொண்டார். செம்மையான உதையுடன் விடியும்வரை கட்டிப் போட்டு விடிந்ததும் ஊர்வலமாக அழைத்துச் சென்று பொலீஸில் அனுமதித்தனர்.

இச்சம்பவம் நாவலப்பிட்டி, சேலம் பிரிட்ஜ் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. (ல-215)


## நெல்லியடி

நெல்லியடிப் பிரதேசத்தில் "தினபதி," "தந்தி," "ராதா," "சிந்தாமணி," "தவச," "சவச," "ரிவிரச," "இரணம," "ரசகதா," "சன்," "ஸ்டார்," "வீக்கென்ட்" இதர சுயாதீன பத்திரிகா சமாஜ பிரசுரங்களை விற்பனை செய்ய நாணயமும் நம்பிக்கையும் வாய்ந்த ஏஜன்ட் தேவை.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

விநியோக மேலாளர்,

சுயாதீன பத்திரிகா சமாஜம்

த. பெ. 1257.

கொழும்பு.


## எவர்தான் விரும்பமாட்டார்?

தொழில் நுணுக்கத் துறையில் சிறப்புக் கல்வி பெற வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையரில் நூற்றுக்கு எண்பது வீதமானோர் மீண்டும் இலங்கை திரும்புவதில்லை. வெளிநாடுகளிலேயே பெரும் உத்தியோகங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனால் இலங்கையின் அபிவிருத்தித் தொழில்களுக்கு வேண்டிய தொழில் நுணுக்கத்துறை வல்லுநர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆம்; தட்டுப்பாடு உண்டு. ஆனால் இந்த அவல நிலைக்குக் காரணம் என்ன? முதலாவதாகத் தொழில் நுணுக்கத் துறையில் சிறப்புக் கல்வி பெற்ற இலங்கையர் தாயகம் திரும்பியதும் தகுந்த தொழில் கிடைக்கும் என்ற உறுதி இல்லை. இரண்டாவதாக வெளிநாடுகளில் கிடைக்கக்கூடிய வேதனமும் அவர்களுக்கு இங்கு கிடைப்பதில்லை. இந்த இரண்டுக்கும் அரசு உறுதி அளிக்குமாயிருந்தால் எந்த இலங்கையர்தான் தனது சொந்த நாட்டில் வேலை செய்ய விரும்பமாட்டார்?

தந்தி

## கன்னியர் மடத்து பெண்கள் விஷயமாக ஆராய்வு

வத்திக்கான், ஆக. 25

ஐரோப்பிய கன்னியர் மடங்களுக்கு இந்திய இளம் பெண்கள் சேர்க்கப்படுவதுபற்றி வெளிநாட்டு வத்திக்கான் பிரதிநிதிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அதே சமயம் கன்னியாஸ்திரிகளாக கேரளப் பெண்களைச் சேர்ப்பதற்கு ஐரோப்பிய கன்னியர் மடங்கள் பெருந்தொகைப் பணம் கொடுத்து வருவதாய் லண்டன் வாரப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியை வத்திக்கான் உத்தியோக பூர்வமாக மறுத்திருக்கிறது.

எனினும் கன்னியாஸ்திரிகளாக விரும்பும் இந்தியப் பெண்களுக்கு உதவுவதில் சில தவறுகள் நடந்திருக்கலாம் என்றும், இந்த முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என திருச்சபை அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

"இந்தியப் பெண்களை ஐரோப்பாவுக்கு அனுப்புவதில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களுக்கு பிதா சைரியாக் புலிதன்புரா என்ற இந்தியப் பாதிரியே காரணம் என்பது சென்ற மாதம் ஆரம்பமான வத்திக்கான் விசாரணையிலிருந்து தெளிவாகியது. அவரது நடவடிக்கை பிஷப்பினால் தடுக்கப்பட்டிருந்தும் கூட தொடர்ந்து இப்பாதிரி பெண்களை ஐரோப்பாவுக்கு அனுப்பும் தமது செயலை நிறுத்தவில்லை" என்றும் வத்திகான் வட்டாரங்கள் கூறின. (ல)


வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல்

தந்தி

சிறு விளம்பரங்கள்

## வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய ஊருப்பொலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காணி இரண்டையும் தா அல்லது பணம் தா"

# கட்டியவளுக்கு காதல் கணவனுடைய பணத்தில்

## புதுமையான மனைவி என்று கணவன் கூறினார்

சிலாபம், ஆக- 25

"அவள் எனது மனைவி என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்- ஆனால் நான் கண்ட பெண்களில் மிகவும் புதுமையானவள் இவள்- காதலுக்காக அல்ல இவள் என்னை மணந்தது; பணத்துக்காகவே என்னை மணந்தாள்."

சிலாபம் நீதிபதி திரு. எஸ்- பி- குணவர்தன முன் விசாரிக்கப்பட்ட சீவனாம்ச வழக்கொன்றில் பிரதிவாதி ஒருவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ் வழக்கில் வென்னப்புவை தொலிஞ்சதியவைச் சேர்ந்த டபிள்யூ எலிசபெத்பெர்னாண்டோ என்ற பெண் தோமஸ் பெர்னாண்டோ என்பவரிடமிருந்து சீவனாம்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

தன்னையும் இரு குழந்தைகளையும் ஒரு காரணமும் இன்றி கணவன் விட்டுப் பிரிந்ததாக மனைவி தனது சீவனாம்ச மனுவில் கூறியிருந்தார்.

பிரதிவாதியின் வழக்குறிஞர்.

"சார், முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் பிரதிவாதிக்குச் சொந்தமான காணியையும் 70 தென்னை மரங்களையும் மனைவியின் பெயருக்கு எழுதித் தர நாங்கள் ஒத்துக் கொண்டோம். எனது கட்சிக்காரரிடம் சீவனாம்சம் செலுத்தப் பணம் இல்லாததாலேயே நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம். மனுதாரரும் ஒத்துக் கொண்டு உறுதிப்பத்திரத்திலும் கையெழுத்திட்டுள்ளார். ஆனால், இப்போது காணி வேண்டாம் என்று மறுத்தால் அதைப்பற்றி எங்களால் ஒன்றும் செய்ய முடியாது."

மனைவியின் வழக்குறிஞர்:

"வெறும் தென்னை மரங்கள் 70 கொண்ட காணி ஒன்றினால் எங்களுக்கு ஒருவிதமான பிரயோசனமும் கிடையாது."

நீதிபதி: "முன்பு ஒத்துக் கொண்டால் இப்போது மட்டும் ஏன் மறுக்கவேண்டும்."

மனுதார்: "50 தென்னை மரங்கள் உடைய இன்னொரு காணித்துண்டும் அவரிடமிருக்கிறது. அதையும் என் பெயருக்கு எழுதவேண்டும் அல்லாவிட்டால் எனக்கு சீவனாம்சம் செலுத்தட்டும்."

கணவன்: "என்ன ஆசை இந்தப் பெண்ணுக்கு! அவளுக்குத் தேவையான சமயத்தில் பணம் கொடுக்க முடியுமென்றால் நான் நல்ல மனிதன். என்னிடம் பணம் இல்லாவிட்டால்தான் நான் கசந்தவனாவேன். என்னை மன்னிக்க வேண்டும் சார், மற்றைய காணித் துண்டை அவள் பெயருக்கு எழுதமாட்டேன்."

மேல் விசாரணை செப்டெம்பர் 14-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல)

## நவரத்தினம் கொலை வழக்கு கொழும்பில் விசாரணை

சாவகச்சேரி, ஆக. 25

"எமது வழக்கு மீதான விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற வேண்டும்" என்று கோரி எதிரிகள் சார்பில் சமர்ப்பித்த ஒரு மனுவைத் தொடர்ந்து, மீசாலை நவரத்தினம் கொலை வழக்கு கொழும்பு, உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி, மீசாலையைச் சேர்ந்த க. நவரத்தினம் என்ற வாலிபரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும். அதே நேரத்தில் அதே இடத்தில் வைத்து மேலும் ஐவரைக் கொலை செய்ய முயன்றதாகவும், எஸ்- செல்லத்துரை, என்- ஆறுமுகம், என்- இராஜதுரை, எஸ்- செல்லப்பா. இ- சுந்தரம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ எல்- எஸ்- ஸ்ரீமானே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மேற்படி கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது.

மனுவை ஏற்றுக்கொண்ட நீதியரசர், வழக்கை கொழும்பு உயர் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தி, வழக்கு விசாரணை செய்யப்படும் திகதி பின் அறிவிக்கப்படும் என்றும் எதிரிகளிடம் தெரிவித்தார். (ல-51)

## காட்டில் கிடந்த மனித எலும்பு பற்றி விசாரணை

"நானும் எனது மைத்துனரும் காட்டுப் பாதை வழியாக சென்று கொண்டிருந்தபோது நான் மயக்கமடைந்தேன். உடனே மைத்துனர் தனது இடுப்பிலிருந்த புட்டியொன்றை எடுத்து அதிலிருந்ததில் சிறிதை எனது வாயில் ஊற்றினார். பின்னர் மிகுதி முழுவதையும் தனது வாயில் ஊற்றிக்கொண்டார்."

பொலன்னறுவை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த எஸ்- ஏ- முதியான்சே என்பவரின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் மைத்துனியான புஞ்சி மாத்தயா என்ற பெண்மணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலன்னறுவையில் உள்ள கல்தம்பறவ காட்டினுள் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூட்டிலிருந்தே முதியான்சே இறந்து விட்டாரென உறுதிசெய்யப்பட்டது. இவர் சுமார் மூன்று மாதங்களுக்கு முன் இறந்துள்ளார் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு- டி- பி- இரத்நாயக்கா மரண விசாரணை நடாத்தியபோது சாட்சி மேலும் தெரிவித்ததாவது:—

"இறந்தவர் எனது கணவனின் தம்பி- கடந்த ஜூன் மாதத்தில் ஒரு நாள் நான் எனது மூத்த சகோதரியின் வீட்டிற்குச் செல்ல கணவரின் அனுமதியைக் கேட்டேன்.

அதைத் தொடர்ந்து எனது கணவர் இறந்தவரிடம் 10 ரூபாவைக் கொடுத்து என்னை அழைத்துச்செல்லும்படி கூறினார். நானும் அவரும் பொலநறுவைக்கு வந்தோம். அங்குள்ள கடை ஒன்றில் தேநீர் அருந்தினோம். உடனே அவர் தனக்குத் தலையைச் சுற்றுவதாகத் தெரிவித்தார்.

அவரது தலைச்சுற்று அடங்கிய பின்னர் இருவருமாக குறுக்கு வழிப் பாதை ஒன்றின் மூலம் காட்டைக் கடப்பதற்காக நடந்து சென்றோம். அப்போது எனக்கு மயக்கம் வந்ததினால் கீழே விழுந்து விட்டேன். உடனே இறந்தவர் தன் இடுப்பிலிருந்த புட்டி ஒன்றை எடுத்து அதிலிருந்ததில் சிறிதை எனது வாயில் ஊற்றி விட்டு மிகுதியைத் தான் அருந்தினார். உடனே அவர் காட்டினுள் மறைந்துவிட்டார்.

சிறிது நேரம் நான் அவரை அங்கு தேடியும் காணாததால் வந்த பாதை வழியே திரும்பி நடந்து பிரதான வீதியை அடைந்தேன். அவ் வழியால் வந்த கார் ஒன்றின் மூலம் ஆஸ்பத்திரியை அடைந்தேன். அங்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் பின் பொலீசிற்கு வாக்குமூலம் அளித்தேன்.

இதுநடைபெற்றுச் சில மாதங்களின் பின்னர் பொலீசார் காட்டினுள் எலும்புக் கூடொன்றைக் கண்டுபிடித்துள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலீஸ் நிலையத்திற்குச் சென்றேன். இறந்தவர் கடைசியாக அணிந்த இடைப்பட்டி, சாரம், ஷேர்ட் ஆகியவற்றை நான் அடையாளம் கண்டு கொண்டேன். அவர் கொண்டு வந்த புட்டியையும் பொலீசார் கண்டெடுத்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து டிங்கிரி பண்டா என்பவரது சாட்சியத்தையும் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (ல-7)

## முதல் முறையாக சிங்களத்தில்

முதல் முறையாக, கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி முன் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் வழக்கறிஞர் ஒருவர் சிங்களத்தில் வழக்கு விசாரணையை நடத்தினார்.

திரு. டி- ஆர்- பி- தூர்காபஸ்கி என்பவரே குறிப்பிட்ட வழக்கறிஞர். (ல)

அறிக்கை கையளிப்பு

## ஆசிரியர்களுக்கு புதிய இடமாற்றத் திட்டம்

ஆசிரியர்களின் புதிய இடமாற்றத் திட்ட அறிக்கை நேற்று கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் மஹ்மூதிடம் கையளிக்கப்பட்டது.

இடமாற்றத் திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டியின் சார்பில் வித்தியாதிபதி திரு. யூ. டி- ஐ. சிறிவர்தன உத்தேச இடமாற்றத் திட்ட அறிக்கையை அமைச்சரிடம் கையளித்தார்.

ஆசிரிய சங்கங்கள் பலவும் சம்மேளனங்கள் பலவும் சமர்ப்பித்த ஆலோசனைகளை இக் கமிட்டியினர் ஆராய்ந்து, திருத்தங்களைச் செய்த பின், இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

உத்தேச இடமாற்றத் திட்டத்தில் பல புதிய முறைகள் கையாளப்பட இருப்பதாகத் தெரிகிறது. அவற்றில் பின்வருவனவும் அடங்கியுள்ளதாக நம்பப்படுகிறது.

★ ஒவ்வொரு கல்வி மாவட்டத்துக்கும் ஒரு இடமாற்றச் சபை இயங்கும். கல்வி அமைச்சில் மத்திய இடமாற்றச்சபை இயங்கி மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றங்களைக் கவனிக்கும்.

★ மாவட்ட ரீதியில் நியமனங்கள் வழங்கி மாவட்டங்களுக்குள்ளேயே இடமாற்றங்கள் நிகழும்.

★ 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தமது சொந்த மாகாணங்களில் கடமையாற்ற ஏதுவான முறையில் இடமாற்றங்கள் நிகழும். சேவை அடிப்படை கஷ்டப் பிரதேச சேவை முதலியவற்றை அனுசரித்தே எதிர்காலத்தில் இடமாற்றங்கள் நிகழும்.

நேற்றுக் கையளிக்கப்பட்ட இடமாற்றத் திட்ட அறிக்கையை அமைச்சர் இக் கமிட்டியினருடன் விரிவாக ஆராய்ந்து வருகிறார்.

ஆசிரியர்களின் இடமாற்ற ஆராய்வுக் கமிட்டியில் கல்வி அமைச்சைச் சேர்ந்த திரு. யூ. டி- ஐ. சிறிசேன, திரு- வீ. துரைசிங்கம், திரு. ஆரியதாஸ, ஆசிரிய சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் திரு. எல்- ஆரியவன்ஸா, ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளான திரு. டீ- பீ. ஐ- குலசிங்க, திரு- எட்வார்ட் வீரசேகரா, திரு. எச்- என்- பெர்னாண்டோ, திரு- ரீ- யூ- சமரக்கூன், திரு- எம்- எல். அமரசேகரா ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

## விமானம் திருப்பப்பட்டது

நியூயோர்க், ஆக. 25

டிரான்ஸ் வேல்ட் 727 ஜெட் விமானம் ஒன்றை ஒரு நபர் கியூபாவுக்குத் திசை திருப்பினார்.

கியூபாவுக்கு விமானத்தைத் திருப்பாவிட்டால் குண்டு வீசி விமானத்தை எரித்து விடப்போவதாய் விமானி பயமுறுத்தப்பட்டார்.

## ஓடைக்குள் அழுகிய உடல்

நாவலப்பிட்டி, ஆக- 25

ஓடைக்குள் அழுகிய உடல் கிடந்ததைப் புல் வெட்டும் தொழிலாளி கண்டாராம்.

நாவலப்பிட்டி, கொந்தென்னவை அருகில் கம்பளை பொது வீதியருகிலுள்ள ஓர் ஓடையில் அழுகிய நிலையிலிருந்த உடல் ஒன்றை, மாட்டுக்குப் புல் வெட்டச் சென்ற ஒருவர் கண்டார். அலறிப் புடைத்துக் கொண்டு வந்து அயலவரிடம் விஷயத்தைக் கூறினாராம்.

நாவலப்பிட்டி பொலீஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ல-315)


### கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை = கொழும்பு.

விற்குமிடம்:—

34, செட்டியார் தெரு, கொழும்பு = 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகளுடைய மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

# புதைத்த சடலத்தை தோண்டி எடுக்கத் தடை

"புதைக்கப்பட்ட சடலத்தை மீண்டும் தோண்டுவதற்கு உத்தரவிட முடியாது என்ற நீதிபதியின் உத்தரவு சரியானதே."

கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையைச் சேர்ந்த திருமதி ஐ. எம். பெருமாள் என்பவரின் மனுவொன்றை விசாரித்த நீதியரசர் திரு. வி. டி. தாமோதரம் மேற்கண்டவாறு கூறினர்.

காலஞ்சென்ற திருமதி பியட்ரிஸ் சந்திரசேகரத்தின் சடலத்தை மீண்டும் தோண்டி பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட வேண்டும் என்று காலஞ்சென்றவரின் மகள் திருமதி ஐ. எம். பெருமாள் இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

திருமதி பெருமாளின் தாயாரான திருமதி சந்திரசேகரம் கடந்த மாதம் 27-ம் திகதி கொழும்பில் உள்ள தனியார் மருத்துவ விடுதியொன்றில் அனுமதிக்கப்பட்டு ஆகஸ்ட் 6-ம் திகதி காலமானர்.

ஈமச் சடங்குகள் முடிந்த பின், இம்மரணம் பற்றி தான் சந்தேகப்படுவதாக திருமதி பெருமாள் கொட்டாஞ்சேனைப் பொலீஸுக்கு முறையிட்டு சடலத்தை மீண்டும் தோண்டி பிரேத பரிசோதனை நடத்த வேண்டும் என தோரினர்.

இதையடுத்து கொட்டாஞ்சேனைப் பொலீஸார் கொழும்பு மேலதிக நீதிபதி திரு. என். பி. டி. எஸ். விஜேசேகர முன் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இம் மனு விசாரணையில் குறிப்பிட்ட மருத்துவ விடுதியின் டாக்டரும் சாட்சியம் அளித்தார்.

தனது மனுவில் தாயின் மரணம் பற்றி தனது சகோதரியான திருமதி மேரி மாடில்டா ஜோய்ஸ் நைல்ஸ் என்பவர் மீதும் திருமதி பெருமாள் சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

இம்மனுவை விசாரித்த நீதிபதி கூறியதாவது:—

"திருமதி பெருமாளுக்கும் அவர் சகோதரிக்கும் ஈமக்கிரியை விஷயமாக ஏற்பட்ட தகராறென்றை அடுத்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் எவ்விதமான உண்மையும் இல்லை. மற்றச் சாராரை சங்கடப்படுத்துவதற்காக இறந்தவரின் சடலம் தோண்டப்பட வேண்டும் என்று மனுதாரர் கோரி இருப்பார் என நான் நம்புகிறேன்".

இவ்வாறு நீதிபதி திரு. விஜேசேகரா குறிப்பிட்டு சடலத்தை மீண்டும் தோண்டுவதற்கு உத்தரவிட மறுத்தார்.

இத்தீர்ப்புக்கு எதிராகவே திருமதி பெருமாள் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

உயர் நீதிமன்றத்துக்கு திருமதி பெருமாள் தாக்தல் செய்த மனுவில் ஏழு பேர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

(ல-177-ச)

## கல்வியின் தரம் குறைந்த காரணத்தை மந்திரி கூறுகிறார்

கல்வி புகட்டுவதிலும், நிர்வாக வேலைகளிலும் தகுந்த மேற்பார்வை இல்லாததால் கல்வித் தரம் குறைந்து விட்டது. இது தொடர்ந்து நடைபெற அனுமதிக்க முடியாது. மாவட்ட கல்வி அதிகாரிகளும், வித்தியாதிகாரிகளும் காரியாலயங்களில் கடமையாற்றாமல், பாடசாலைகளை அடிக்கடி மேற்பார்வையிடுதல் வேண்டும்.

மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கான கருத்தரங்கில் சொற்பொழிவாற்றிய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தின் மஹ்மூத் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கருத்தரங்கு அண்மையில் கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்வி அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"எல்லோருக்கும் சம கல்வி கிடைக்க வேண்டும் என்ற அரசாங்கக் கொள்கையை நிறைவேற்றுவது மாவட்டக் கல்வி அதிகாரிகள், வித்தியாதிகாரிகளின் பொறுப்பாகும். சில கல்வி அதிகாரிகள் கஷ்டமான பிரதேசங்களில் கடமையாற்ற விரும்புகிறார்களில்லை. அதனல் புதிய திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்விப் பிரதேசங்களை மூன்று வகையாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்பது புதிய திட்டமாகும். கல்வி அதிகாரிகள் அரசியல் வாதிகளின் பின்னல் செல்லாமல், கல்வியின் தரத்தை உயர்த்த உழைக்க வேண்டும்".

(ல-15)

## 35 ஆயிரம் வாலிபர் குடியேற்றப்படுவர்

குடியேற்றத் திட்டங்களில் இன்னும் 35,000 பேரை அமர்த்துவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அத்தோடு ஒவ்வொரு குடியேற்றப் பிரிவுக்கும் மாவட்ட காணி உத்தியோகத்தர், ஒருவரும் நியமிக்கப்படுவார்.

காணி மந்திரி திரு. ஹெக்டர் கொப்பேகடுவ, நீர்ப்பாசன மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா, இரு அமைச்சுகளினதும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட ஒரு மகாநாட்டில் இதுபற்றி தீர்மானிக்கப்பட்டது.

நெல் உற்பத்தியை அதிகரிக்க குடியேற்ற வாசிகளுக்கு சகல உதவிகளையும் வழங்குவது பற்றி இம் மகாநாடு நடத்தப்பட்டது.

இவ்விஷயமாக உப குமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டது.

தற்சமயம் குடியேற்றப் பகுதியில் வாழும் வேலையற்ற வாலிபரிடையே இருந்து இந்த 35,000 பேரும் தெரிவு செய்யப்படுவர்.

## கூட்டுத்தாபன தலைவரானர்

கொழும்பு, ஆக. 26

தேசிய ஜவுளிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக திரு. சுமதிபால பண்டாரகே நியமிக்கப்பட்டுள்ளார்.

# கொலையுண்டவரில் இருவர் மது போதையில் இருந்தனர்

லாஸ் ஏன்ஜல்ஸ், ஆக. 25

"நிறைமாதக் கர்ப்பிணியான நடிகை ஷாரன் டேட்டும், அவரது முன்னள் காதலனன ஜே செய்ரிங்கும் அலங்கோலமான நிலையில் பிணமாகிக் கிடந்தனர். கழுத்துகள் கயிற்றினல் சுருக்கிடப்பட்டிருந்தன."



ஹிப்பி மான்சன்

ஷாரன் டேட் கொலை வழக்கில் சாட்சியம் அளித்த லாஸ் ஏன்ஜல்ஸ் திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் ஜோமஸ் நோகுச்சி மேற்கண்டவாறு கூறினர்.

"பிணமாகக் கிடந்த ஐவரில் இருவர் போதை வஸ்துகளை அருந்தி இருந்தனர்" என்றும் அவர் கூறினர்.

ஹிப்பி தலைவன் சார்ள்ஸ் மான்சன், அவனது பெண் சீடர்கள் மூவரும் இந்தக் கொலைகளைச் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

"ஷாரன் டேட் மது அருந்தி இருக்கவில்லை. ஆனல் 26 கத்திக் குத்துக் காயங்களுடன் மரணமாகியிருந்த அபிஜியல் பொங்கர் என்னும் அழகியின் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்தபோது அவள் போதை வஸ்து எதையோ உட்கொண்டிருந்தாள் என்பது புலனகிறது.

"கொலையுண்டிருந்த ஐந்து பேரின் உடல்களிலும் மொத்தம் 102 கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன" என்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் கூறினர். (ம)



ஷாரன் டேட்

## கிருஷ்ண ஜயந்தி ஊர்வலத்தில் பொலீஸ் துப்பாக்கிச் சூடு

பம்பாய், ஆக. 25

முஸ்லிம்கள் வாழும் பகுதியில் இந்துக்களின் விழா ஒன்று நடைபெற்ற போது ஏற்பட்ட குழப்பத்தில் பொலீஸார் சுட்டனர். ஒருவர் மாண்டார் 13 பேர் படுகாயம் அடைந்தனர்.

கல்வீச்சு காரணமாக 6 பொலீசாரும் காயமடைந்தனர்.

கிருஷ்ண ஜயந்தி ஊர்வலம் ஒன்று முஸ்லிம் பகுதியிலுள்ள ஆஸ்பத்திரிக் கருகில் சென்ற போது இச்சம்பவம் ஏற்பட்டது.

கல்வீச்சுக்கான காரணம்என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை. இச்சம்பவம் ஹிந்து — முஸ்லிம் வகுப்புக் கலவரமாக உருவெடுத்ததா என்பதும் தெளிவாகவில்லை.

ஒரு டாக்ஸி தீமூட்டப்பட்டதை அடுத்து கடைகளும், உணவு விடுதிகளும் திடீர் என மூடப்பட்டன. (ல)

## பொலீஸாரும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகம் செய்தும் பொலீஸார் குழப்பத்தைத் தடுத்தனர்.

ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இப்படி மோசமான மோதல், நகரில் என்றுமே ஏற்பட்டதில்லை என்று சொல்லப்படுகிறது. கடைகளுக்கும் பொருள்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

அரச மாளிகைக்கு எதிரே உள்ள தேசிய யுத்த ஞாபகஸ்தம்பத்தின் படிகளில் ஹிப்பிகள் தூங்கக் கூடாது என்று மாநகர சபை தடை விதித்ததைத் தொடர்ந்தே இக்குழப்பம் ஏற்பட்டது. (ஐ)

## வீட்டுச் சொந்தக்காரர் பயனடையும் விதத்தில் திட்டம்

ஒரேயொரு வீடுமட்டும் சொந்தமாக வைத்திருப்பவர்கள் அவ் வீட்டில் வாடகைக்கு இருப்போரை அகற்ற முடியாதும் வீட்டை விற்க முடியாதும் இருந்தால் அவர்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யும்.

வீடமைப்புத் திட்டம் சம்பந்தமான ஆலிப் கமிட்டி இதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது.

குடியிருப்பாளர்களை எழுப்பமுடியாத நிலையில் உள்ள தனி வீட்டுச் சொந்தக்காரர்களிடம் இருந்து அரசாங்கம் அந்த வீடுகளை வாங்க வேண்டுமென்றும், அவற்றைக் குடியிருப்பாளர்களுக்கு அரசாங்கம் வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்றும் ஆலிப் கமிட்டி சிபார்சு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தேச திட்டத்தின்படி தனி வீட்டுச் சொந்தக்காரர்களிடம் இருந்து அரசாங்கத்தினல் வாங்கப்பட்டு வாடகைக்கு வழங்கப்படும் வீடுகள் இறுதியில் குடியிருப்பாளர்களுக்கே சொந்தமாகும்.

குடியிருப்பாளர்களை எழுப்பமுடியாத நிலையில் தமது வீட்டை அரசாங்கத்துக்கு விற்றுப் பெறும் பணத்தைக் கொண்டு, தனிவீட்டுச் சொந்தக்காரர்கள் புதிய வீடு ஒன்றை வாங்க முடியும். அல்லது நிர்மாணிக்க முடியும்.

ஜனப் எம். எஸ். ஆலிப்பைத் தலைவராகக் கொண்டுள்ள இந்த கமிட்டி தனது அறிக்கையைக் கூடியவிரைவில் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், துரிதமாக அறிக்கையைத் தயாரிக்கும்படி பிரஸ்தாப கமிட்டியைக் கேட்டுள்ளார்.

கமிட்டியின் சிபார்சுகள் குடியிருப்பாளர்களுக்கு எந்தவிதத்திலும் கஷ்டத்தைக் கொடுக்க மாட்டாதென்று அறியப்படுகிறது.

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியீட்டு திகதி 26 ஆகஸ்ட் 1970.
Thanthi, 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org